**<u>செய்தி வெளியீடு எண். 827</u>** **<u>நாள்.12.11.2009</u>**

**<u>மாண்புமிகு தமிழக துணை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் 14.11.2009 (சனிக்கிழமை) அன்று திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி புதிய பேருந்து நிலையத்திற்கு எதிரில் திருத்துறைப்பூண்டி–திருவாரூர் சாலைக்கு மேற்கு பகுதியில் கட்டப்பட்டுள்ள தியாகி பி.சீனிவாசராவ் நினைவு மண்டபத்தை திறந்து வைக்க உள்ளார்கள்.</u>**

மாண்புமிகு தமிழக துணை முதலமைச்சர் அவர்கள், 14.11.2009 (சனிக்கிழமை) அன்று காலை திருத்துறைப்பூண்டி புதிய பேருந்து நிலையத்திற்கு எதிரில் திருத்துறைப்பூண்டி–திருவாரூர் சாலைக்கு மேற்கு பகுதியில் கட்டப்பட்டுள்ள தியாகி பி.சீனிவாசராவ் நினைவு மண்டபத்தை திறந்து வைக்க உள்ளார்கள்.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் 10.4.2007அன்று சட்டப்பேரவையில் சுதந்திர போராட்ட வீரரும், விவசாய தொழிலாளர்கள் மேம்பாட்டிற்காக பாடுபட்டவருமான தியாகி பி.சீனிவாசராவ் அவர்களுக்கு திருத்துறைப்பூண்டியில் நினைவு மண்டபம் அமைக்கப்படும் என அறிவித்தார்கள். அதனடிப்படையில், அரசாணை (நிலை) எண்.427, தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை, நாள்.11.10.2007ன்படி ரூ.27 இலட்சம் மதிப்பீட்டில் நினைகவம் அமைக்க ஆணையிடப்பட்டது.

இந்நினைவு மண்டபம் திருத்துறைப்பூண்டி புதிய பேருந்து நிலையத்திற்கு எதிரில் திருத்துறைப்பூண்டி–திருவாரூர் சாலைக்கு மேற்கு பகுதியில் 0.15 சென்ட் பரப்பளவில் இடம் தேர்வு செய்யப்பட்டு கட்டப்பட்டுள்ளது. கட்டட பரப்பளவு நினைவு மண்டபம் – 108.21 சதுர மீட்டர். போர்டிகோ 21.76 சதுர மீட்டர், மொத்தம் 129.97 சதுர மீட்டர் ஆகும். இப்பணி பொதுப்பணித்துறையின் மூலம் 10.03.2008ல் தொடங்கப்பட்டு 22.09.2009ல் அனைத்துப் பணிகளும் முடிவுற்று 6.10.2009ல் செய்தி மக்கள் தொடர்புத் துறையிடம் ஒப்படைக்கப்பட்டது. இதனை மாண்புமிகு தமிழக துணை முதலமைச்சர் அவர்கள் 14.11.2009 அன்று காலை திறக்கவுள்ளார்கள்.

மாண்புமிகு தமிழக துணை முதலமைச்சர் அவர்கள், 14.11.2009 (சனிக்கிழமை) அன்று மாலை 4.00 மணிக்கு திருவாரூரில் வேலுடையார் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் நடைபெற உள்ள விழாவில், ஓடாச்சேரி பெரியார் நினைவு சமத்துவபுரத்தினை திறந்து வைத்தும், மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு சுழல் நிதி வழங்கியும், புதிய கட்டடங்களை திறந்து வைத்தும், வளர்ச்சித் திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டியும் மற்றும் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கியும் விழா பேருரையாற்ற உள்ளார்கள்.

இவ்விழாவிற்கு திருவாரூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.எம்.சந்திரசேகரன், இ.ஆ.ப. அவர்கள் வரவேற்புரையாற்ற உள்ளார்கள்.

மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் திரு.உ.மதிவாணன் அவர்கள் தலைமையுரையாற்ற உள்ளார்கள்.

..2

மாண்புமிகு மத்திய நிதித்துறை இணை அமைச்சர் திரு.எஸ்.எஸ்.பழனிமாணிக்கம் அவர்கள், மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் திரு.பரிதி இளம்வழுதி அவர்கள், நாளை நாடாளுமன்ற உறுப்பினர் திரு.ஏ.கே.எஸ்.விஜயன் ஆகியோர் முன்னிலையுரையாற்ற உள்ளார்கள்.

நாடாளுமன்ற உறுப்பினர் திரு.ஆர்.வைத்தியலிங்கம், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.வை.சிவபுண்ணியம், திரு.கே.உலகநாதன், திருமதி.பி.பத்மாவதி, திரு.க.அன்பழகன், திருமதி.இளமதி சுப்பிரமணியன், மாவட்ட ஊராட்சித் தலைவர் திருமதி.செ.கமலவதனம், மின்வாரிய ஆலோசனைக் குழு உறுப்பினர் திரு.பூண்டி கே.கலைவாணன், நகர் மன்றத் தலைவர் திரு.கு.தென்னன், ஒன்றிய குழுத் தலைவர் திருமதி.ராணி சங்கர் ஆகியோர் வாழ்த்துரை வழங்க உள்ளார்கள்.

மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட அலுவலர் திரு.எஸ்.அண்ணாமலை பிரேம்குமார் நன்றியுரையாற்ற உள்ளார்கள்.

இவ்விழாவில் அனைவரும் கலந்து கொண்டு விழாவை சிறப்பிக்குமாறு திருவாரூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.எம்.சந்திரசேகரன், இ.ஆ.ப. அவர்கள் அன்புடன் அழைக்கிறார்.

*****

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.